*10*

# மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள் (1 பேதுரு 5:1–14)

*சரியான வார்த்தையைப் பயன்படுத்துதலுக்கும், ஏறக்குறைய சரியான வார்த்தையைப் பயன்படுத்துதலுக்கும் இடையில் உள்ள வேறுபாடு, இடியுடன் கூடிய ஒரு மின்னலுக்கும் மின்மினி பூச்சிக்கும் இடையில் உள்ள ஒரு வேறுபாட்டைப் போன்றதாக உள்ளது. பேதுருவின் முதல் நிருபம் இடியுடன் கூடிய மின்னல்களின் சக்தியுடன் விரிகிறது. 5ம் அதிகாரத்தில் கட்டளைக்குப்பின் கட்டளை ஸ்டாக்கெட்டோ நடையில் பின்தொடருகிறது: "மந்தையை நீங்கள் மேயுங்கள்!"; "ஊழியம் செய்யுங்கள்!"; "கீழ்ப்படியுங்கள்!"; மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்!"; "உங்கள் கவலைகளையெல்லாம் கர்த்தர்மேல் வைத்துவிடுங்கள்!"; "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்!"; "விழித்திருங்கள்!"; "எதிர்த்து நில்லுங்கள்!"; "நிலைகொண்டு இருங்கள்!" இந்தக் கட்டளைகளுக்கு இடைப்பிணைப்பாக துதி மற்றும் ஆறுதலின் வார்த்தைகள் உள்ளன.*

*பேதுரு தமது வாசகர்கள், பன்னிருவரில் ஒருவரிடத்தில் இருந்து - சொல்லப் போனால் கர்த்தரைச் சுற்றி உள்வட்டத்தை ஏற்படுத்தியிருந்த மூவரில் ஒருவரிடத்தில் இருந்து - பெற விரும்பிய அறிவுரை மற்றும் திசைகாட்டுதல் ஆகியவற்றின் வகையை அவர்களுக்கு அளித்தார். பேதுரு நிருபத்தின் கடைசி அதிகாரம், அவரது சக சீஷர்களை, விழிப்புடனும் நீடிய பொறுமையுடனும் இருக்கும்படி அழைத்தது மற்றும் மூப்பர்களுக்கும் இளைஞர்களுக்கும் ஆற்றுப்படுத்துதலின் சிறப்பு வார்த்தைகள் சிலவற்றை அளித்தது.*

## *சகமூப்பர்களுக்கு ஒரு வேண்டுகோள் (5:1-4)*

*பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டிலும், தேவனுக்கு உண்மையாயிருத்தல் என்பது ஒரு சமூகத்துடன் ஈடுபட்டிருத்தல் என்பதை உள்ளடக்கினது. பழைய ஏற்பாட்டில் சமூகம் என்பது இஸ்ரவேல் நாடாக இருந்தது; புதிய ஏற்பாட்டில் அது கிறிஸ்துவின் சபையாக உள்ளது. கிரேக்க - ரோம உலகில், ஒரு நகரத்தில் முதன்முதலாக மனம் மாறியவர்களை, ஒரு பிரசங்கியார் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தியபோது, செய்யத் தேவையான பணியில் அவர் ஒருபகுதியை மாத்திரமே செய்திருந்தார். தீத்துவுக்குப் பவுல், "நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும்" என்று கூறினார் (தீத்து 1:5).*

*ஒரு சபைக்குழுமம் ஆராதிக்கவும் ஊழியம் செய்யவும் ஒன்றுகூடத் தொடங்கிய சற்றுக்காலத்தில், அந்த சபைக்குழுமத்தைக் கண்காணிக்கவும் வழிநடத்தவும். பக்குவமடைந்த கிறிஸ்தவ ஆண்கள், மூப்பர்களாகத்*

தேர்ந்தெடுக்கப்பட வேண்டியிருந்தது. பவுலும் பர்னபாவும் தங்கள் முதல் சுவிசேஷப் பயணத்தில் நிலைநாட்டிய சபைகளில் மூப்பர்களை நியமித்தனர் என்று கூறப்படுகிறது (நடபடிகள் 14:23), மற்றும் மூப்பர்களாக ஊழியம் செய்யும் மனிதர்களின் வகையைப் பற்றித் தீமோத்தேயுவுக்கும் தீத்துவுக்கும் பவுல் நெறிமுறைகள் கொடுத்தார்.

"மூப்பர்" என்ற சொற்றொடர், இஸ்ரவேல் நாட்டில் வளமான கலாச்சாரப் பாரம்பரியத்தைக் கொண்டிருந்தது. நியாயப்பிரமாணப் புத்தகங்களில், மோசே ஆலோசனை மற்றும் ஆதரவுக்காக "இஸ்ரவேலின் மூப்பர்களை" திரும்பத் திரும்ப அழைத்தார். "நகரத்தின் மூப்பர்கள்" என்பது கானான் நாட்டில் மக்கள் குடியமர்ந்த பின்பு அடிக்கடி கூறப்பட்ட ஒரு சொற்றொடராக உள்ளது. மூப்பர்கள் என்பவர்கள் தங்களை நல்லவர்கள் என்று நிரூபித்திருந்த வயது முதிர்ந்த மனிதர்களாக இருந்தனர். அவர்கள் நல்ல குடும்பங்களைப் பேணியவர்களாகவும் நயப்பாங்கு மற்றும் தேவபக்தி ஆகியவற்றின் மாதிரி களாகத் தங்களைக் காண்பித்தவர்களாகவும் இருந்தனர். சபையிலும் இதைப் போலவே இருந்தது. ஒரு மூப்பராக இருத்தல் என்பது, கனம், மதிப்பு மற்றும் பொறுப்பு ஆகியவற்றின் நிலைப்பாட்டில் ஊழியம் செய்வதாக இருந்தது.

உண்மையில், "மூப்பர்" என்பது, சபைகளில், சபையார்களின் ஆவிக்குரிய நடத்துனர்களாக ஊழியம் செய்யும் அலுவலர்களுக்குப் புதிய ஏற்பாடு பயன்படுத்துகிற மூன்று பணிப்பெயர்களில் ஒன்றாக மாத்திரமே உள்ளது. KJV வேதாகமம் சிலவேளைகளில் மொழிபெயர்த்துள்ள வகையில், "கண்காணிகள்" அல்லது "ஆயர்கள்" என்பது மூப்பர்களாக ஊழியம் செய்பவர்களுக்கான வேறொரு பணிப்பெயராக உள்ளது. சபையின் ஆவிக்குரிய தலைவர்களுக்குப் புதிய ஏற்பாடு பயன்படுத்தும் மிகவும் வண்ணமய மான வார்த்தை "பாஸ்டர்கள்" என்பதாகும், இதற்குரிய கிரேக்க வார்த்தை "மேய்ப்பர்கள்" என்று இன்னும் சிறப்பாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பேதுரு 5:1, 2ல் இந்த மூன்று வார்த்தைகளையும் பயன்படுத்தினார். மூப்பர்கள் மந்தையை மேய்த்து கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார். கடந்து செல்லுகையில் நாம், எப்போதெல்லாம் புதிய ஏற்பாடு மூப்பர்களைக் குறிப்பிடுகிறதோ, அப்போதெல்லாம் அவர்கள் பன்மையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதைக் கவனிக்க வேண்டும்.

மூப்பர்கள் - சபையின் கண்காணிகள் அல்லது மேய்ப்பர்கள் - என்பவர்களை சுவிசேஷ ஊழியர்களாக நினைத்துக் குழப்பிக்கொள்ளக் கூடாது. சுவிசேஷ ஊழியர் என்பவர் சுவிசேஷத்திற்குக் கட்டியம் கூறுபவராக, அதை அறிவிப்பவராக இருக்கிறார். ஒரு நீண்ட அல்லது ஒரு குறுகிய காலத் திற்கு இடமளிக்கப்பட்டவராக இருக்கலாம், ஆனால் சபையைக் கண்காணித்தல் அல்ல, வார்த்தையை அறிவித்தலே அவரது ஊழியமாக உள்ளது. அவர் சுவிசேஷ ஊழியர் என்ற வகையிலான தமது பொறுப்புகளின் நெறிமுறையில் ஒரு பாஸ்டராக இருப்பதில்லை. ஆசியா மைனர் பகுதியில் இருந்த சபைகளின் ஆவிக்குரிய நடத்துனர்களான பாஸ்டர்களுக்குப் பேதுரு 5:1-4ல் உரையாற்றினார். சபையானது, குறிப்பாக இடர்ப்பாடு கொண்டிருந்த காலங்களில், திறன்வாய்ந்த, நல்ல வகையில் தகுதிபெற்ற மூப்பர்களைக் கொண்டிருத்தலின் அவசியத்தை அந்த அப்போஸ்தலர் அறிந்திருந்தார்.

பேதுரு தம்மை, மூப்பர்களின் அலுவலிலும் அதன் பொறுப்புகளிலும்

*பங்கு பெற்றிருந்த ஒருவராக மூப்பர்களிடத்தில் குறிப்பிட்டுக் கொண்டார். அப்போஸ்தலர் எருசலேமில் இருந்த சபையின் மூப்பர்களில் ஒருவராக இருந் திருக்கச் சாத்தியக் கூறு உள்ளது. அவர் ரோமாபுரி அல்லது வேறு சில இடங்களில் இருந்த சபையின் மூப்பர்களில் ஒருவராக ஊழியம் செய்திருக்கலாம். பெரிய இடப்பரப்பின் மூப்பர்கள் என்று புதிய ஏற்பாட்டில் யாரும் குறிப்பிடப்பட வில்லை. எந்த இடத்தில் இருந்த சபையென்று அடையாளப்படுத்தாவிட்டாலும், ஒரு குறிப்பிட்ட சபைக் குழுமத்தின் மூப்பர் என்றே பேதுரு தம்மைக் குறிப்பிட்டார் என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.*

*பேதுரு ஒரு உடன்மூப்பராக இருந்தார், ஆனால் அவர் இங்கு குறிப்பிட்ட மூப்பர்களைப் போல் இன்றி, அவர் கர்த்தருடைய பாடுகளுக்குச் சாட்சியாகவும் இருந்தார். அவர்களின் சமகூட்டாளிகளில் அவர் ஒருவராக இருந்தார், ஆனாலும் அவர் இன்னும் சற்று அதிகமான தகுதிகொண்டிருந்தார். கிறிஸ்துவின் பாடுகளுக்கான அவரது சாட்சியமானது, அவர் ஒரு மூப்பராக இருந்ததோடு, கிறிஸ்துவின் அப்போஸ்தலராகவும் இருந்தார் என்பதை நினைவூட்டப் பயன்பட்டது (நடபடிகள் 1:21, 22). கர்த்தருடைய மறுவருகை என்ற கருத்து பேதுருவின் சிந்தையில் இருந்து ஒருபோதும் தொலைவில் இருந்ததில்லை. “இனி வெளிப்படும் மகிமை”யை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல் என்பது அவரது மாபெரும் நம்பிக்கையாக இருந்தது (5:1). அந்த முடிவிற்கு அவர் புத்திமதிகளின் வரிசை ஒன்றை அளித்தார்.*

### *மந்தையை மேயுங்கள்*

*5:2ல் “மந்தையை மேய்த்து” என்பதற்கான KJV மொழிபெயர்ப்பு மிகவும் கட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது. ஒரு மேய்ப்பர் தமது மந்தையை மேய்த்தலைக் காட்டிலும் அதிகமானவற்றைச் செய்தார். அவைகளுக்கு அவர் தோழராக, பாதுகாப்பாளராக மற்றும் வழிகாட்டியாக இருந்தார். இஸ்ரவேல் மக்கள் மத்தியில் மேய்ப்பர் என்பவர், நவீன அமெரிக்கர்களுக்கு கௌபாய்கள் எனப்படுபவர்கள் எப்படி உள்ளனரோ அதைப்போன்று முற்றான உதாரண மாக இருந்தனர். அவர் தமது மந்தைக்குத் தம்மையே கொடுப்பவராக, தயவுள்ள நடத்துனராக மற்றும் வழிகாட்டியாக இருந்தார். தீர்க்கதரிசிகள், இஸ்ரவேலுடன் தேவனுக்குள்ள உறவை விவரிக்க விரும்பியபோது, அவர்கள் மேய்ப்பர் என்ற ஒப்புவமையைக் காட்டிலும் அதிகம் சிறப்பான வேறொன்றையும் காண வில்லை, ஒருமூப்பரின் ஊழியத்தினுடைய நடைமுறைப் பயன்பாட்டின் சில கருத்துக்களை, ஏசாயாவின் பின்வரும் வார்த்தைகளில் கண்டறிய முடியும்: “மேய்ப்பனைப்போலத் தமது மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்” (ஏசாயா 40:11). இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் பேதுரு, சபையின் மூப்பர்களை உற்சாகப்படுத்தினார்.*

### *கண்காணிப்புச் செய்யுங்கள்*

*“பாஸ்டர்” அல்லது “மேய்ப்பர்” என்ற வார்த்தை தனது விளக்கத்தை, இஸ்ரவேலின் தேசிய அனுபவத்தில் கண்டறிகையில், “கண்காணி” என்ற வார்த்தையானது தனது அர்த்தத்தை, கிரேக்க மொழிபேசும் உலகத்தில் இருந்து தரவழைக்கிறது. கிரேக்கர்களின் மத்தியில் episkopos (இது “கண்காணி” என்று*

மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) என்ற வார்த்தை, மத இயல்பு கொண்டவை உட்படப் பலவகையான நிறுவனங்களில் நிலைத்த பொறுப்புகளுடன் இருந்த அலுவலர்களைக் குறிப்பதாக இருந்தது. மேற்பார்வை பார்க்கும் விஷயங்கள் அல்லது ஒரு காப்பாளாராகச் செயல்படுதல் என்பது கண்காணியின் ஊழியமாக இருந்தது. ரோமாபுரியின் கிளமென்ட் என்பவர் முதல் நூற்றாண்டின் பிற்பகுதி யில், கொரிந்து நகரில் இருந்த சபைக்கு எழுதிய கடிதம், தேவனைப் "படைத்தவர் மற்றும் ஆத்துமாக்களின் காப்பாளர் [*episkopos*]" என்று குறிப்பிட்டது. பேதுரு இயேசுவை, "உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியு மானவர் [*episkopos*]" என்று அழைத்தார் (2:25). கண்காணிகள் என்ற வகையில், மூப்பர்கள் தங்கள் பராமரிப்பில் ஒப்புவிக்கப்பட்ட ஆத்துமாக்களை விழித் திருந்து கவனிக்கின்றனர். அதை அவர்கள், சபையில் கூறப்படுகிற மற்றும் செய்யப்படுகிற யாவும் தேவனுடைய மகிமைக்கென்றே செய்யப்படத் தக்கதாக, சபைக்குப் போதனை மற்றும் சபையின் நடைமுறை ஆகியவற்றைக் கண்காணித்தலின் மூலம் செய்கின்றனர்.

### மாதிரியாக இருங்கள்

5:3ல் பேதுரு, மந்தைக்கு மாதிரியாக இருக்க வேண்டும் என்ற தமது புத்திமதிக்கு முன்பாக, மூன்று எதிர்மறைகளை வைத்தார். எவரொருவரும், (1) அவர் வற்புறுத்தப் பட்டதற்காக அல்லது (2) மூப்பராயிருத்தல் தனிப்பட்ட ஆதாயத்தைக் கொடுக்கும் என்பதற்காக அல்லது (3) அவர் தமது சக கிறிஸ்தவர்கள் மீது அதிகாரம் செய்வதை விரும்புகிறார் என்பதற்காக மூப்பராக ஊழியம் செய்யக் கூடாது. மூப்பர் என்பவர், தமது தாலந்துகள் எல்லாவற்றையும் கர்த்தருக்குச் சமர்ப்பிக்க வேண்டும். ஒரு மூப்பர் தமது நடத்துவத்துவ நிலைப்பாட்டின் காரணமாக, தமது வார்த்தைகள் மற்றும் செயல்கள் ஆகியவற்றில் தாம் முன்வைக்கும் மாதிரியில் சிறப்பாக ஜாக்கிரதை உள்ளவராக இருக்க வேண்டும்.

கர்த்தருடைய சபையின் மூப்பராக இருக்க வேண்டும் என்று ஒரு மனிதர் நாட வேண்டியது ஏன்? கூடுதல் சுமைகளை மேற்கொள்ளாமலேயே செய்வதற்குப் போதிய பணியும் பொறுப்பும் ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் இருப்பதில்லையா? பேதுரு பின்வரும் பதிலைக் கொடுத்தார். முதலாவது, ஒருவர் மூப்பராகப் பணியாற்றும் திறன் கொண்டிருந்தால், அவ்வாறு செய்தல் 4:10ன் வேண்டுகோளுக்குள் அமைகிறது: "அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்." இரண்டாவது, உண்மையாக ஊழியம் செய்பவர்களுக்கு "மகிமையுள்ள வாடாத கிரீடம்" ஒன்று காத்துள்ளது (5:4).

சில வேளைகளில் "கிரீடம்" என்ற வார்த்தைக்குப் பின்னால், இரண்டு கிரேக்க வார்த்தைகள் உள்ளன. ஒன்று ஆட்சி செய்பவரின் கிரீடத்தைக் குறிக்கும் "diadem" என்பதை அர்த்தப்படுத்துகிறது. இன்னொன்று, விளையாட்டுகளில் ஒரு விளையாட்டு வீரர் வெற்றிகொள்வது போன்ற, வெற்றியின் கிரீடத்தை அர்த்தப்படுத்துகிறது. இந்த இரண்டாவது வார்த்தையே இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு விளையாட்டு வீரர் ஒரு கிரீடத்தைப் பெற்றபோது, அது மாபெரும் கனத்திற்கு உரியதாக இருந்தது, ஆனால் அது

இலைகளால் மாத்திரமே செய்யப்பட்டதாக இருந்தது. அது விரைவிலேயே மங்கிப் பழுத்துப் போய்விடும். ஆனால் பிரதான மேய்ப்பர் தோன்றும்போது, அவர் தமது உண்மையுள்ள ஊழியக்காரர்களுக்குச் சூட்டுவிக்கும் கிரீடம் அவ்வாறு இராது. மேய்ப்பராக ஊழியம் செய்தல் என்பது நல்ல மேய்ப்பரின் நோக்கத்தின் விசேஷ ஒருமைப்பாடு மற்றும் அடைவிடம் ஆகியவற்றில் பங்கேற்றலாக உள்ளது.

## கர்த்தர்மீது கவலையை வைத்துவிடும்படி வேண்டுகோள் (5:5-7)

செய்விளைவு நடத்துனர்கள் நல்ல பின்பற்றாளர்களைக் கொண்டிருக்க வேண்டும். மூப்பர்கள் தங்கள் நடத்துவத்தை, தாங்கள் யாருக்கு ஊழியம் செய்கின்றனரோ, அவர்களின் நல் விருப்பத்தின்படி மாத்திரம் செயல்படுத்தக் கூடியவர்களாக இருக்கின்றனர். அவர்கள், சந்தையிடத்தில் பணம்செலுத்துக் காசோலையைக் கட்டுப்படுத்தும் காரணத்தினால் தனது தலைமைத்துவத்தைச் செயல்படுத்தும் மேலாண்மையாளர் போன்ற அல்லது படையைச் செயல்படுத்துவிக்கும் படைத்தலைவர் போன்ற பதவிநிலையில் இருப்ப தில்லை. கிறிஸ்தவர்கள் தங்களின் ஆவிக்குரிய நடத்துனர்களாகத் தாங்கள் தேர்ந்தெடுத்தவர்களின் வழிநடத்துதலை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதனால் தான் பேதுரு, மூப்பர்களுக்கான தமது புத்திமதிகளுடன் அதே சந்தர்ப்பப் பொருளில் இளம் கிறிஸ்தவர்களுக்கும் ஆலோசனை வழங்கினார்.

இளம் கிறிஸ்தவர்கள், சபையின் ஆவிக்குரிய கண்காணிகளுக்கு மனப்பூர்வ மாகக் கீழ்ப்படிய வேண்டும் என்று பேதுரு கூறினார். பெரும்பான்மையான சூழ்நிலைகளில், கீழ்ப்படிதல் என்பது அனுகூலமற்றநிலை அல்லது பலவீனம் என்ற அதே பதவிநிலையை மறைமுகமாக உணர்த்துகிறது, ஆனால் அது மனப்பூர்வமாக அளிக்கப்படும் போது விஷயம் அவ்வாறு இருப்பதில்லை. இளைஞர்கள் மூப்பர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமே என்பதினால் இனியும் கீழ்ப்படியாமல், மூப்பர்கள் அவசியத்தின் காரணமாகத் தங்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகின்றனர். எல்லாரும் தங்களின் பலவகைப்பட்ட வரங்களை, “தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல” முன்வைக்க வேண்டியவர்களாக உள்ளனர் (4:10).

நல்ல பின்பற்றாளராக இருத்தலுக்குக் குறிப்பிட்ட அளவில் தாழ்மை தேவைப்படுகிறது. பேதுரு தமது காலத்தில் இருந்த இளைஞர்களுக்கு, தாழ்மையை அணிந்துகொள்ளும்படி வேண்டுகோள் விடுத்தார். “அணிந்துகொள்ளுங்கள்” என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது, புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில் மாத்திரமும் உலகப்பிரகாரமான எழுத்துக்களில் மிகச்சில இடங்களில் மாத்திரமும் வருகிறது. இது, உடலைச் சுற்றிக் கட்டுப்படுகிற குறிப்பிட்ட வகையிலான உடையை மறைமுகமாக உணர்த்துகிறது. இது அற்ப மான அடிமை ஒரு உடையினால் தனது உடலைச் சுற்றிக் கொள்ளுதலாகும் என்றும், எனவே பேதுரு தமது வாசகர்களிடத்தில், சபைக்கு பயனுள்ளதான எந்த ஒரு தாழ்மையான பணிநிலையிலும் இருந்து ஊழியம் செய்யும்படி வேண்டிக் கொண்டார் என்றும் சிலர் யூகிக்கின்றனர். மற்றவர்கள், நேர்த்தியான

உடைகள் செல்வமிக்க மக்களால் மாத்திரமே அணியப்பட்டன, அவை உடலைச் சுற்றி நேர்த்தியாக ஒன்றுகூட்டப்பட்டு ஒரு முடிச்சினால் இறுக்கப்பட்டன. அவ்விஷயத்தில் அப்போஸ்தலர், தமது வாசகர்களிடத்தில், அவர்கள் தாழ்மையை அணிந்து கொண்டால் தேவனுடைய கண்களில் எவ்வளவு மகிமையாக உடையணிந்தவர்களாக இருப்பார்கள் என்று கூறினார் எனலாம்.

பேதுரு இவ்விரு கருத்துக்களையும் எடுத்துரைக்கும் நோக்கத்துடன் இருந்திருக்க மாட்டார் என்பது நிச்சயம், ஆனால் அவரது வார்த்தைகளில் இருந்து நாம் பயன் அடைவதற்கு இவற்றிற்கு இடையில் ஒன்றைத் தேர்ந்து கொள்ள வேண்டும் என்ற கட்டளை எதுவும் இங்கே காண்பது அரிது. உண்மையில், தாழ்மையான நபர் கர்த்தருக்கும் அவரது மக்களுக்கும், ஊழியம் செய்பவராகக் கண்டு பாராட்டப்படாதபடிக்கு அதைச் செய்வதற்கான வழிகளைக் கண்ணோக்கும் பண்பைக் கொண்டுள்ளார். அந்தப் பண்பு “தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது” (3:4). இந்தக் காரணங்கள் யாவற்றினாலும், நீதிமொழிகள் 3:34ன் வார்த்தைகள் இவ்விடத்தில் நடைமுறைப்படுகின்றன: “இகழ்வோரை அவர் இகழுகிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்.”

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டிலும், தேவன் பலவான்களைத் தாழ்த்தி, தாழ்ந்தவர்களை உயர்த்துகிறார் என்பது மிகவும் தொடர்ந்துவரும் கருத்துக்களில் ஒன்றாக உள்ளது. அன்னாள் பாடிய துதியின் அழகு-மிகுந்த பாடல், “கர்த்தர் தரித்திரம் அடையச்செய்கிறவரும், ஐசுவரியம் அடையப்பண்ணுகிறவருமாயிருக்கிறார்; அவர் தாழ்த்துகிறவரும் உயர்த்துகிறவருமானவர். அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்; அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார்” என்ற வார்த்தைகளை உள்ளடக்கிற்று (1 சாமுவேல் 2:7, 8). மரியாளின் வார்த்தைகளும் இதைப்போன்றவையாக இருந்தன: “பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார். பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்” (லூக்கா 1:52, 53). இயேசு, “தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்” என்று மூன்றுமுறை கூறினார் (மத்தேயு 23:12; லூக்கா 14:11; 18:14). கிறிஸ்தவர்கள் தங்களைத் தேவனுடைய பலத்த கரத்திற்குள் தாழ்த்த வேண்டும், அப்போது அவர்களை உயர்த்துவதாகத் தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளார் என்று பேதுரு மற்றும் யாக்கோபு ஆகிய இருவருமே, கிறிஸ்தவர்களை வேண்டிக் கேட்டுக்கொண்டனர் (யாக்கோபு 4:10). தேவனுக்கு முன்பாக உங்களைத் தாழ்த்தி உங்கள் கவலைகள் யாவற்றையும் அவர்மீது வைத்துவிடுதல் பாதுகாப்பானது, ஏனெனில் அவர் எப்போதும் உங்களைப் பராமரிக்கிறார்.

## சகோதரத்துவத்துடன் நிற்பதற்கு ஒரு வேண்டுகோள் (5:8-11)

மூன்றாம் முறையாகப் பேதுரு, ஆவியில் தெளிவாயிருக்கும்படி தமது வாசகர்களிடத்தில் வேண்டிக்கேட்டுக்கொண்டார் (காண்க 1:13; 4:7). சுயகட்டுப்பாடும் விழிப்புணர்வும் மிகவும் அவசியமானவையாக

உள்ளன, ஏனென்றால் கிறிஸ்தவர்கள், பிசாசு என்ற மாபெரு விரோதியைக் கொண்டுள்ளனர், அவன் இந்த உலகத்தில் யாரைப் பட்சிக்கலாம் என்று கெர்ச்சிக்கிற சிங்கம்போல் சுற்றித் திரிகிறான். ரோம அரசாங்கத்தைப் பிசாசின் நபர்த்துவமாகப் பேதுரு புரிந்து கொண்டிருந்தார் என்பது சாத்தியமானதாக, நிகழக்கூடியதாகக் கூட உள்ளது. பேதுரு முன்பு மறைமுகமாக உரைத்திருந்த "பற்றியெரிகிற அக்கினி" போன்ற சோதனைகளுக்குப் பின்னால், ரோமப் பேரரசின் அதிகாரம் நின்றிருந்தது (காண்க 1:6, 7; 4:12); அந்த அதிகாரமே கிறிஸ்தவர்களைப் பட்சிப்பதாக அச்சுறுத்திற்று.

யாக்கோபு 4:7ல் கர்த்தருடைய சகோதரர், "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" என்று கூறினார். பேதுருவும் தமது வாசகர்களைப் பிசாசுக்கு எதிர்த்து நிற்கும்படி வேண்டிக்கேட்டுக்கொண்டார், ஆனால் அவர் இந்த எதிர்த்து நிற்குதலை இந்த நிருபம் முழுவதிலும் எப்போதும் பிரசன்னமாயிருக்கும் துன்புறுத்தப்படுதல்களுடன் பிணைத்தார். மற்றவர்களை எதிர்த்து நிற்குதலில், தேவனுடைய மக்களின் ஐக்கியம் பலத்தைக் கண்டடைகிறது. மற்றவர்கள் நம்மைச் சார்ந்துள்ளனர் என்று அறிதலானது, சரியானதைச் செய்வதற்கு மாபெரும் ஊக்குவித்தலாக அடிக்கடி அமைகிறது. சமீபத்தில் நான், ஒரு சகோதரர் "பலமுறை நான், தவறானதைச் செய்யும்படியான சோதனையை, சபையின் நல்லமக்கள் என்னிடத்தில் இருந்து மேன்மையான விஷயங்களை எதிர் பார்க்கின்றனர் என்ற எளிய சிந்தனையினாலேயே வெற்றிகொண்டுள்ளேன்" என்று கூறியதைக் கேள்விப்பட்டேன். சககிறிஸ்தவர்களின் ஐக்கியமும் ஆதரவும், நன்மை செய்வதற்கும் பாவத்தை அழிப்பதற்கும் மாபெரும் ஊக்குவிப்பாக உள்ளது.

பேதுரு தமது நிருபத்தின் முடிவுப்பகுதியை நெருங்குகையில், இந்தக் கிறிஸ்தவர்கள் சேவிக்கும் தேவன் நன்மையும் இரக்கமும் உள்ளவர் என்று அவர்களுக்கு அவர் நினைவூட்டினார். பேதுரு தமது நிருபத்தின் தொடக்க வசனங்களில், தமது வாசகர்கள் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களாக இருந்தனர் என்று மறு உறுதிப்பாடு அளித்திருந்தார்; எனவே அவர்கள் "கிறிஸ்து இயேசுவுக்குள் தமது நித்திய மகிமைக்கு" அழைக்கப்பட்ட விசேஷித்த மக்களாக இருந்தனர் என்ற கருத்தை, இந்த நிருபத்தின் முடிவில், அவர்களின் சிந்தைகளுக்குக் கொண்டுவருதல் என்பது பொருத்தமானதாகவே இருந்தது. துன்புறுதல் என்பது அவர்களுக்குக் கொஞ்சக்காலம் மாத்திரமே இருந்தது (1:6), ஏனென்றால் விரைவிலேயே கர்த்தர் திரும்ப வருவார். அந்த வேளையில் பலவீனமும் உதவியற்ற தன்மையும் பெலத்தினால் விழுங்கப்படும். அவர்களைத் தேவன் மீளக்கட்டுவார், அவர்களை அவர் பலமும் உறுதியும் உள்ளவர்கள் ஆக்குவார்.

## முடிவுக் குறிப்புகள் (5:12-14)

பேதுரு, வழக்கமான நடைமுறையைப் பின்பற்றி, தாம் இருந்த இடத்தின் சபையிலிருந்து வாழ்த்துக்களைத் தமது வாசகர்களுக்கு அனுப்பினார். இந்த நிருபத்தில் முடிவு வாழ்த்து என்பது, இந்த நிருபத்தின் மிகவும் விவாதத்திற்கு உரிய அம்சங்களில் ஒன்றாக உள்ளது. சொற்றொடரானது மறைவானதாக, புரிந்து கொள்ளக் கடினமானதாக உள்ளது, இது KJV வேதாகமத்தில்

இவ்வார்த்தைகள் சாய்வெழுத்துக்களில் இடப்படக் காரணமாயிற்று. நேரடியான அர்த்தத்தில் இது, "உங்களுடனேகூடத் தெரிந்துகொள்ளப் பட்டிருக்கிற பாபிலோனில் உள்ளவளும் [பொதுமைப் பிரதிப்பெயர்ச்சொல் அல்ல, ஆனால் பெண்மைக்குரிய சுட்டுச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது] ... உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்." "சபை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க மொழி வார்த்தை பெண்மைப் பெயர்ச்சொல்லாக உள்ளது. பேதுரு இவ்விடத்தில் பாபிலோனில் இருந்த சபையையே குறிப்பிட்டார் என்று மொழி பெயர்ப்புகள் பொதுவாகச் சுட்டிக்காண்பிக்கின்றன. பாபிலோன் என்பது அடையாளத்துவத்தில் ரோமாபுரியைக் குறித்தது என்ற கருத்தை நாம் ஏற்கனவே வழங்கியுள்ளோம். புதிய ஏற்பாட்டிற்குப் புறம்பே யூதத்துவ எழுத்துக்களிலும் வெளிப்படுத்தின விசேஷத்திலும் (எ.கா. 18:9, 10), பாபிலோன் என்பது "பூமியின் இராஜாக்கள்"மீது ஆளுகை செலுத்திய "மகாநகரமாக" இருந்தது.

பேதுருவின் முடிவு வாழ்த்தில் அவருடன் யோவான் மாற்கு இணைந்து கொள்கிறார். பழங்காலப் பாரம்பரியம், மாற்கு சுவிசேஷத்திற்குப் பின்னால் பேதுருவின் அதிகாரத்துவம் நிற்கிறது என்று கூறுகிறது. பேதுருவின் வாழ்வின் முடிவில் அவருடன் ரோமாபுரியில் மாற்குவைக் காணுதல் என்பது ஆர்வத் திற்கு உரியதாக உள்ளது. நடபடிகள் 15:39ல் நாம் மாற்குவைப் பற்றிய கடைசிக் குறிப்பைக் கொண்டுள்ளோம். இருப்பினும், தீமோத்தேயு ரோமா புரிக்கு வரும்போது தம்முடன் மாற்குவை அழைத்துவர வேண்டும் என்று பவுல் கேட்டுக்கொண்டார் (2 தீமோத்தேயு 4:11). இது 2 தீமோத்தேயு நிருபம் 1 பேதுரு நிருபத்திற்கு முன் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கான சுட்டிக்காட்டுதலாக இருக்கலாம்.

## முடிவுரை

1 பேதுரு நிருபம் ஒரு சிறிய நிருபமாக இருந்தாலும், தகவல் மற்றும் போதனையின் மாபெரும் செல்வத்தைக் கொண்டுள்ளது. நாம், இரண்டு கேள்விகளை நமக்கு முன் வைத்திருக்க முயற்சி செய்துள்ளோம்: (1) பேதுரு தமது முதல் வாசகர்களுக்கு என்ன கூற நோக்கம் கொண்டிருந்தார்? மற்றும் (2) அவருடைய வார்த்தைகளில் நமது தற்கால சபைக்கு நாம் ஏற்படுத்த வேண்டிய நடைமுறைப் பயன்பாடு என்ன?

மூன்று சிந்தனைகள் இந்த நிருபத்தில் திரும்பத் திரும்ப வருகின்றன: (1) பேதுரு நிருபத்தின் முதல் வாசகர்கள் கிறிஸ்துவின் நாமத்தைச் சொந்தமாகக் கொண்டிருந்ததால் துன்புறுத்தப்பட்டனர். துன்புறுத்தப்படுதல் என்பது ஒருக்காலும் பின்புலத்தில் தொலைவில் இருந்ததில்லை, ஆனால் அது 1:6, 7; 3:13-17; 4:12-19 மற்றும் 5:9, 10 ஆகிய வசனங்களில் நேரடியாகக் குறிப்பிடப்பட்டது. (2) கர்த்தர் விரைவில் திரும்ப வருவார் என்பதால், துன்புறுத்தப்படுதல் என்பது கொஞ்சக்காலம் சகித்துக்கொள்ளப்படக் கூடும். கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்வை எதிர்பார்ப்பில் வாழ்ந்தனர். (3) கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்வைப் பரிசுத்தமாக வாழ வேண்டியிருந்தது. நவீன காலசபைக்கு, 1 பேதுரு நிருபத்தின் இந்தப் பாடங்களைக் கற்றுக்கொள்ளுதல் என்பது, இந்த உலகத்தில் தேவன் விரும்பிய வண்ணமாக, நாம் வலிவுநிறைந்த செல் வாக்குச் செலுத்துபவர்களாக இருப்பதற்குத் தேவையான பலத்தையும் உற்சாகமூட்டுதலையும் நாம் பெற்றுக்கொள்வதற்கானதாக உள்ளது.